


திருச்சியில் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்ட ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் துரை வைகோ வெற்றி பெற்றதையடுத்து கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் திருச்சி மேற்கு தொகுதிக்குட்பட்ட உறையூர் மேல கல்நாயக்கன் தெரு, கீழ கல்நாயக்கர் தெரு, பாத்திமா நகர், வெக்காளியம்மன் கோயில்,லிங்கா நகர், நவாப்தோட்டம், பஞ்சவர்ணசாமி கோயில்,வாத்துக்கார தெரு,பாளையம்பஜார், மேட்டு தெரு, காந்திபுரம் உள்ளிட்ட பகுதிகளில் திறந்த வாகனத்தில் வீதி வீதியாக சென்று பொது மக்களிடம் நன்றி தெரிவித்தனர். இந்த நன்றி அறிப்பின் போது மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், சேர்மன் துரைராஜ், பகுதி செயலாளர் நாகராஜ், கண்ணன் ம.தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளர் டாக்டர் ரொக்கையா, ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் வெல்ல மண்டிசோமு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் ”கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழங்கினார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன், ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி.கே.டி.முரளி, ஒன்றியச் செயலாளர்கள் பி.கே.டி.முரளி, கிளியனூர் ராஜி, மைதிலி ராஜேந்திரன், நகரச் செயலாளர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, துணைத் தலைவர் பருவ கீர்த்தனா விநாயகமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.இளங்கோவன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் அன்புமணி, கௌதம், பிரேமா குப்புசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மருத்துவத் துறையில் 1474 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி

# 102 தாய் - சேய் நல தொலைபேசி சேவையை முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஆக. 19-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளை (20.08.2024) மருத்துவத் துறையில் 1474 பேருக்கு பணிநியமன ஆணைகள் வழங்குகிறார்கள் எனவும் 102 தாய்சேய் நல தொலைப்பேசி சேவை மூலம் கர்ப்பிணி தாய்மார்களின் நலத்தினை கண்காணிக்கும் சேவையை தொடங்கி வைக்கிறார் எனவும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (17.08.2024) சென்னையில் சட்டப்பேரவை மானியக்கோரிக்கை (2024-25) அறிவிப்பு அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களையும் 102 தாய்சேய் நல தொலைபேசி சேவை மூலம் கண்காணித்து மருத்துவ ரீதியாக உரிய அறிவுரைகள் வழங்குவதற்குரிய சேவையை தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**கர்ப்பிணி பெண்களுக்கு 102 சேவையின் மூலம் தொலைபேசி வாயிலாக ஆலோசனை வழங்குதல்**

2024-25 ஆம் ஆண்டு மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கையில் 110 அறிவிப்புகள் வெளியிடப்பட் டது. அந்த அறிவிப்புகளில் அ.எண் 60 ன்படி, தமிழ்நாட்டி லுள்ள அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களையும், 102 தாய்சேய் நல தொலைபேசி மையத்தின் மூலம் கண்காணித்து மருத்துவ ரீதியான உதவிகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தவகையில் அந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் நோக்கில் இன்று சேவை மையம் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.இந்த சேவை மையத்தில் 50 ஆலோசகர்கள் பணியில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். இந்த சேவையினை வலுப்படுத்த ரூ.1.08 கோடி செலவில் கூடுதல் இருக்கைகள் 102 அழைப்பு சேவை மையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த மையத்திலிருந்து ஆலோசகர்கள் கர்ப்பிணி தாய்மார்களுக்கு தொடர்ந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வார்கள். ஒவ்வொரு தாய்மார்களுக்கும் குறைந்த பட்சம் 5 அழைப்புகள் மூலம் தொடர்பு கொள்ள முனைவார்கள்.

மேலும் 100% கர்ப்பிணித் தாய்மார்களை தொடர்பு கொண்டு அவர்கள் பெற்றும் வரும் சிகிச்சை முறைகள், உடல் நலம், அவர்களுக்கு தேவையான மருத்துவ நடவடிக்கைகள் போன்றவற்றை கேட்டறிந்து அதற்கேற்ற மேல் நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும். மேலும் கிராம சுகாதார செவிலியர் மற்றும் வட்டார மருத்துவர் கர்ப்பிணியை உடனே சந்தித்து தேவைப்படும் அவசரகால சிகிச்சைகளை அளிக்க உயர் சிகிச்சை மையங்களுக்கு (சீமாங்) பரிந்துரை செய்து, சிகிச்சை கிடைக்க பெறும்வரை கண்காணித்து சேவை வழங்கப்படுவது உறுதி செய்தல் வேண்டும். அதன்பின்னரே அந்த அழைப்பு முடிவடைந்தது என்று கருதப்படும். அந்த அழைப்பிற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மாவட்ட சுகாதார அலுவலருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்படும். மாவட்ட அளவில் நடவடிக்கை எடுக்க தவறினால் அது மாநில அளவில் நடவடிக்கைக்காக பரிந்துரைக்கப்படும்.

**மருத்துவத்துறையில் 1474 பணிநியமன ஆணைகள்**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை மகப்பேறு இறப்பு என்பது மிகப்பெரிய அளவில் இன்று குறைந்து வருகிறது. 2018-2020 மாதிரி பதிவு முறையின் படி தமிழ்நாட்டின் தாய்மார்களின் இறப்பு விகிதம் 1 இலட்சம் பிறப்புகளுக்கு 58ல் இருந்து 54 ஆக குறைந்துள்ளதாக தற்போதைய மாதிரி பதிவு அறிக்கை தெரிவிக்கின்றது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு யோகா போன்ற பயிற்சிகள் அளித்து கிராம சுகாதார செவிலியர்கள் மூலமும், மருத்து வர்கள் மூலமாகவும் அவர்களை தொடர்ந்து கண்காணித்தன் மூலம் மகப்பேறு இறப்பு விகிதம் 1 இலட்சம் பிறப்புகளுக்கு 45.5 ஆக குறைந்துள்ளது.

எனவே பூஜ்ஜியம் என்கின்ற நிலை கொண்டு வர தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் கர்ப்பிணி தாய்மார்களின் எண்ணிக்கை ஆண்டிற்கு 9 இலட்சம் என்கின்ற அளவில் இருக்கின்றது.சற்றோப்ப 9 இலட்சம் குழந்தைகள் ஆண்டிற்கு தமிழ்நாட்டில் பிறக்கின்றது.

**கர்ப்பிணிகளை கண்காணிக்கும் பணி!**

இன்று தொடங்கப்பட்ட ஆலோசனை மையம் மூலம் கர்ப்பம் தரித்து 6 மாதங்களுக்கு மேலான பட்டியலை தயாரித்து தற்போது 3 இலட்சம் கர்ப்பிணிகளை கண்காணிக்கும் பணியினை தொடங்கி யிருக்கிறார்கள். அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்படும். மகப்பேறு இறப்பினை குறைத்திடும் வகையிலும், கர்ப்பிணிப் பெண்களின் சிரமங்களை போக்கிடும் வகையிலும், அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை அளித்திடும் வகையிலும் 102 தாய்சேய் நல தொலைபேசி சேவை தற்போது முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுத்துறையில் இருக்கின்ற காலிப் பணியிடங்கள் ஒவ்வொன்றும் நிரப்பப்பட்டு வருகிறது. மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் முறையாக தேர்வுகள் நடத்தி முறைப்படி வெளிப்படையாக பணிநியமனம் செய்யப்படும் போது யாராவது நீதிமன்றங்களுக்கு சென்று தொடர்ச்சி யாக காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, சட்டத்துறையும் விரைந்து செயல்பட்டு அந்த வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு ஏற்கெனவே 1021 மருந்து வர்கள் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். 977 செவிலியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டார்கள்.

இந்திய வரலாற்றில் முதன்முறையாக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களுக்கு கலந்தாய்வு நடத்தி அவர்கள் விரும்புகின்ற இடங்களுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்று 946 மருந்தாளுநர் பணியிடங்கள் நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு இது சம்பந்தமாகவும் பல வழக்குகள் போடப்பட்டு உயர்நீதிமன்றத்தில் இறுதி முடிவுகள் வந்து அவர்களுக்கான கலந்தாய்வு முடிவுற்றிருக்கிறது. தற்போது அவர்களுக்கான பணி ஆணைகள் தயார் செய்யப்பட்டிருக்கிறது. நாளை (20.08.2024) காலை 10 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 946 மருந்தாளுநர் பணியிடங்களுக்கான பணி ஆணைகள் வழங்கப்பட உள்ளது.

அதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் மருத்துவத் துறையில் உதவியாளர் பணியிடங்களைத் தேர்ந்தெடுத்தோர் எண்ணிக்கை 523 ஆகும். அவர்களுக்கான பணி ஆணையினை முதலமைச் சர் அவர்கள் தர இருக்கிறார்கள். அதேபோல் VOCATIONAL COUNSELLOR (ஆலோசகர்) என்று சொல்லக்கூடிய பொறுப்புகளுக்கு 5 என ஆக மொத்தம் 1474 பணியாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பணி ஆணையினை தர இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மருத்துவக்கல்லூரி முதல்வர் பணியிடம் குறித்தான கேள்விக்கு:**

கல்லூரி முதல்வர்கள் பணிமூப்பு அடைந்து பணியில் இருந்து செல்லும் போது அவர் இடத்திற்கு இன்னொருவர் நியமிக்கப்பட வேண்டும்.ஒருவர் கல்லூரியில் இருந்து பணி ஓய்வு பெறும்போது அதே நாளில் அக்கல்லூரியில் உள்ள மூத்த பேராசிரியர் (Senior Professor) அவர்கள் பொறுப்பு பணி எடுத்துக் கொள்வார்கள்.காலியிடம் என்பதே கிடையாது.கல்லூரி முதல்வர் என்னென்ன பணியினை செய்தாரோ அதேப் பணியினை பொறுப்பு முதல்வரும் செய்வார்கள். 13 மருத்துவக்கல்லூரிகளில் கல்லூரி முதல்வர்களே இல்லை என்பது போலவும், மருத்துவப் பணிகள் முடங்கி கிடப்பது போன்றும் தோற்றத்தை உருவாக்குவது சரியல்ல.

தற்போது 26 மருத்துவக் கல்லூரி முதல்வர்களுக்கு பெயர் பட்டியல் தயார் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. வரும் வியாழக்கிழமைக்குள் 13 மருத்துவக்கல்லூரிகளுக்கு புதிய முதல்வர்கள் நியமிக்கப்படுவார்கள், மீதம் 13 பேர் காத்திருப்பு பட்டியலில் இருப்பார்கள், எங்கு காலியிடம் ஏற்படுகின்றதோ அங்கு இவர்களை நியமனம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தேசிய நல வாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதிஷ், , தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்து வக்கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் மரு.சாந்தாராமன் ஆகியோர் உடனிருந்தனர்.

### உடுமலைப்பேட்டை குடிமங்கலம் மடத்துக்குளம் தாராபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

# 461 பயனாளிகளுக்கு ரூ.9.77 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், ஆக. 19 -

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், சின்னவீரன்பட்டி ஊராட்சி, முருகன் மஹாலில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 09.08.2024 அன்று உடுமலைப்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட 46 பயனாளிகளுக்கு ரூ.1.61 கோடி மதிப்பீட்டிலும், 05 பயனாளிகளுக்கு ரூ.1.54 இலட்சம் மதிப்பீட்டிலும், 135 பயனாளிகளுக்கு ரூ.88.42 இலட்சம் மதிப்பீட்டிலும், குடிமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட 105 பயனாளிகளுக்கு ரூ.3.67 கோடி மதிப்பீட்டிலும்,

16 பயனாளிகளுக்கு ரூ.11.23 இலட்சம் மதிப்பீட்டிலும், மடத்துக்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட 86 பயனாளிகளுக்கு ரூ.3.01 கோடி மதிப்பீட்டிலும், தாராபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட 09 பயனாளிகளுக்கு ரூ.3.58 இலட்சம் மதிப்பீட்டிலும், 59 பயனாளிகளுக்கு ரூ.43.67 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 461 பயனாளிகளுக்கு ரூ.9.77 கோடி மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள், ஊரக வீடுகள் பழுது பார்த்தல் திட்டப்பணிகளுக்கான ஆணைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல பத்மநாபன், மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெய ராமகிருஷ்ணன், உடுமலை வருவாய் கோட்டாட்சியர் ஜஸ்வந்த் கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுப்பர மணியம்,

எத்திராஜ், சிவகுருநாதன், ஸ்ரீதர், நாகலிங்கம், செந்தில் கணேஷ் மாலா, மாவட்ட பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, நகர செயலாளர் எஸ்.வேலுச்சாமி, நகர்மன்றத் தலைவர் எம்.மத்தின், தலைமை செயற்குழு உறுப்பினர் சியாம் பிரசாத், பொதுக்குழு உறுப்பினர் யூ.என்.பி.குமார். ஒன்றிய செயலாளர்கள் தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார், சா.ராஜமாணிக்கம்,

அணிக்கடவு ச.கிரி, எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) மெஞ்ஞானமூர்த்தி, . க.செந்தில்குமார், தி.செழியன், உடுமலை ஒன்றியக் குழு பெருந்தலைவர் மகாலட்சுமி முருகன், துணை தலைவர் சண்முகவடிவேல், ஊராட்சி மன்றத்தலைவர்கள் கலாவதி பழனிச்சாமி, பேச்சியம்மாள், பாலசுப்பிரமணி,

சௌந்தரராஜன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் பாராண்டு தமிழ்செய்த நூற்றாண்டு தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் மாநிலங்களவை கழக குழு தலைவர் திருச்சி என்.சிவா சிறப்புரையாற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் துணை மேயர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி. மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எஸ்.சிவானந்தம், விசாலாட்சி பரமசிவம், எஸ்.இரவிச்சந்திரன் மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மண்டலக்குழு தலைவர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள். கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கிருஷ்ணகிரி ஓட்டல் தமிழ்நாடு மற்றும் ஓசூர் ஓட்டல் தமிழ்நாடு விடுதிகள் மற்றும் உணவகங்களின் செயல்பாடு குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் மற்றும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆய்வு மேற்கொண்டனர். உடன் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், மாநகராட்சி மேயர்.சத்யா, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எம்.சரயு மற்றும் துறை சார்ந்த அலுவலர் கலந்து கொண்டனர்.